**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இ) திருவில்லிபுத்தூர்**
**முன்னிலை:-திரு.க.ஜெயக்குமார், பி.எல்.,எல்.எல்.எம்.,**
**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி**
**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 ஆம் நாள் சனிக்கிழமை**
**வறியவர் அசல் மனு எண்.101/2023**
**TNVR010059132023**

த.கருப்பசாமி (29/2022),
த/பெ தர்மர்,
க.எண்.1/4582/2, தங்கமணி காலனி,
ரோசல்பட்டி,
விருதுநகர் – 626001. ...மனுதாரர்/வாதி.

**/எதிர்/**

1.கார்த்திகேயன்,
த/பெ மூக்கையா,
க.எண்.1/530/1, 1/530/2, காந்தி நகர்,
ரோசல்பட்டி,
விருதுநகர் – 626001.

2.கண்காணிப்பு பொறியாளர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
விருதுநகர் –626001.

3.உதவி மின் பொறியாளர்,
உதவி மின் பொறியாளர் அலுவலகம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பாண்டியன் நகர்,
மல்லாங்கிணர் ரோடு,
விருதுநகர் – 626001. ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்.

இந்த மனு என் முன்பு 08.04.2026 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர்

திரு.M.விவேகானந்த் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.பா.பாண்டியன் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் அழைத்தபோது ஆஜராகாத காரணத்தினால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், இருதரப்பு வாதுரையை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் சீரிய பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரரை வறியவர் என்று விளம்புகை செய்யக்கோரி கட்டளை 33, விதி 1–ன் படி மனுதாரர் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

**மனுவின் சுருக்கம்:–**

2) மனுதாரர் பெயிண்டர் வேலை செய்யும் தினக்கூலி பணியாளர் ஆவார். வழக்கம்போல் மனுதாரர் கடந்த 23.05.2022ம் தேதி 1ம் எதிர்மனுதாரரின் அழைப்பின் பேரில் கதவு எண்.1/872, காந்தி நகர், பாண்டியன் நகர், விருதுநகரைச் சேர்ந்த வனராஜ் என்பவரின் மகன் மணிகண்டனுடன் 1ம் எதிர்மனுதாரர் வீட்டிற்கு பெயிண்ட் அடிக்கும் தினக்கூலி வேலைக்கு சென்றுள்ளார். 1ம் எதிர்மனுதாரர் அறிவுறுத்தலின் பேரில் மனுதாரர் வெள்ளையடிக்க ஆரம்பித்தபோது, வீட்டிற்கு மேல் மொட்டை காரை, மொட்டை காரைக்கு மேல் செல்லும் சுமார் 2 அடி உயரத்தில் 33KV எலெக்ட்ரிக் கம்பி உள்ளது என்றும் அதனால் மனுதாரர், 1ம் எதிர்மனுதாரரிடம் வீட்டிற்கு வெள்ளையடிக்க முடியாது என்றும் கூறியதற்கு, 1ம் எதிர்மனுதாரர் எதுவும் நடக்காது என்றும் அசம்பாவிதம் ஏதும்

ஏற்பட்டால் அதற்கு தான் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன் என்றும் கூறி வலுக்கட்டாயமாக வெள்ளையடிக்கும் வேலையை ஆரம்பிக்க கூறியுள்ளார். மேலும் வீட்டின் உரிமையாளரான 1ம் எதிர்மனுதாரர் பாதுகாப்பு உபகரணங்கள் ஏதும் மனுதாரருக்கு வழங்கவில்லை.

3) மனுதாரரும் வேறு வழியில்லாமல் காலை 9.00 மணியளவில் வேலையை ஆரம்பித்து மதியம் சுமார் 3.30 மணியளவில் மனுதாரர் வெள்ளையடித்துக் கொண்டிருக்கும்போது திடீரென மனுதாரர் மீது மின்சாரம் தாக்கியதில் மனுதாரர் மொட்டைக் காரையில் இருந்து சுமார் 15 அடி உயரத்தில் இருந்து கீழே தூக்கி வீசி எறியப்பட்டார். அதனால் மனுதாரரின் தலை, கழுத்து, காது மற்றும் முதுகு ஆகிய பகுதிகளில் கொடுங்காயம் ஏற்பட்டும், கால் மற்றும் தொடை பகுதிகளில் சதை பிய்த்தெரியப்பட்டும் மற்றும் தலையில் ஆழ்ந்த துவாரம் ஏற்பட்டும், தலை, கண், கழுத்து ஆகிய இடங்களில் கொடுங்காயம் ஏற்பட்டும், சுய நினைவை இழந்து சம்பவ இடத்திலேயே மயக்கமடைந்துள்ளார். உடனடியாக உடன் பணியாற்றிக் கொண்டிருந்த மணிகண்டன் என்பவர் அக்கம், பக்கம் உள்ளோர் உதவியுடன் விருதுநகர், அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதில் முதலுதவி சிகிச்சை அளித்து, காயத்தின் தன்மை மிகக் கொடூரமாக இருந்ததாலும், மிகவும் சீரியஸாக இருந்ததாலும், மதுரை, ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்ல மருத்துவர்கள் அறிவுறுத்திய நிலையில், மதுரைக்கு கொண்டு சென்று சுமார் 20 நாட்களாக சுயநினைவின்றி இருந்து பின்னர் கண்விழித்து சுமார் ஒன்றரை மாதம் காலம் வரை மேற்படி மருத்துவமனையில் தொடர் சிகிச்சை பெற்ற பின்னர் வீடு

திரும்பியுள்ளார்.

4) மேற்படி விபத்தின் காரணமாக மனுதாரர் உடலளவிலும், மனதளவிலும் கடுமையாக பாதிப்படைந்துள்ளார். மேற்படி வெள்ளையடிப்பிற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கை ஏதும் 1ம் எதிர்மனுதாரர் மேற்கொள்ளவில்லை. 2, 3 எதிர்மனுதாரர்கள் பாதுகாப்பற்ற வகையில் 1ம் எதிர்மனுதாரர் வீட்டிற்கு மேலேயே 33 KV மின்சார வயர் உள்ள நிலையில், சட்டத்திற்கு புறம்பாக 1ம் எதிர்மனுதாரரின் வீட்டிற்கு மின் இணைப்பு வழங்கியுள்ளார்கள். 1, 2, 3 எதிர்மனுதாரர்களின் கவனக்குறைவும், அஜாக்கிரதையும் மற்றும் சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கைகளால் மனுதாரர் கொடுங்காயம் அடைந்துள்ளார். அதனால் மனுதாரருக்கு இந்த பாதிப்பு ஏற்பட்டதற்கு 1, 2, 3 எதிர்மனுதாரர்கள் மட்டுமே முழுப்பொறுப்பு ஆவார்கள். மேலும் இந்த சம்பவம் தொடர்பாக பாண்டியன் நகர் ஊரக காவல்நிலையத்தில் 23.05.2022 ஆம் தேதியன்று 1ம் எதிர்மனுதாரர் மீது இ.த.ச பிரிவு 338-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை எண்.86/2022 பதிவு செய்யப்பட்டு, குற்றவியல் வழக்கு விசாரணை, விருதுநகர், குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.2ல் நிலுவையில் இருந்து வருகிறது.

5) மனுதாரர் மட்டுமே அவரது குடும்பத்தில் வருமானம் ஈட்டக்கூடிய ஒரே நபர் ஆவார். அவரை சார்ந்து அன்னாரின் தாய், தந்தை, மனைவி மற்றும் 2 குழந்தைகள் உள்ளனர். மனுதாரருக்கு ஏற்பட்ட கொடுங்காயங்களினால் விபத்திற்கு பின்பு மனுதாரர் எந்த ஒரு வேலைக்கும் செல்ல இயலாமல் உள்ளதாலும், மனுதாரருக்கு சொந்தமான அசையும் மற்றும் அசையாச் சொத்து ஏதும் இல்லாமல்

இருப்பதாலும், மனுதாரர் தன் மனைவி மற்றும் இரு குழந்தைகளுடன் எந்த ஒரு அடிப்படைச் செலவுக்கும் வழியில்லாமல் மிகவும் கஷ்ட ஜீவணம் செய்து வருவதாலும், வழக்கு தாக்கல் செய்யும் இரண்டு மாதங்களுக்கு முன்பாக எந்தச் சொத்தையும் வாங்கவோ, விற்கவோ, ஒப்பந்தம் செய்யவோ இல்லை என்பதாலும், நீதிமன்றக் கட்டணம் செலுத்துவதற்கு போதிய வசதி வாய்ப்பு இல்லாமல் இருப்பதாலும், மனுதாரர் வறியவர் என்பதாலும், மனுதாரரால் பிராதில் கண்ட நீதிமன்றக் கட்டணத்தை செலுத்த இயலவில்லை. அதற்கு ஆதரவாக கிராம நிர்வாக அலுவலர் சான்றிதழ் வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனால் மனுதாரரை இவ்வழக்கில் வறியவர் என்று விளம்புகை செய்து உத்தரவிட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:–</u>**

6) மனுதாரர் வறியவர் என்பதை நீதிமன்றத்தில் தக்க ஆதாரங்களுடன் நிரூபணம் செய்யக் கடமைப்பட்டவர் ஆவார். மனுதாரர் குடியிருக்கும் மனு மற்றும் பிராதில் குறிப்பிட்டுள்ள கதவு எண்.1/4582/2 குடியிருப்பு வீடானது மேற்படியாருக்கு பாத்தியப்பட்ட சொந்த வீடாகும். அந்த வீடானது மேற்படியாரின் தாயார் மாரீஸ்வரி பெயரில் ரோசல்பட்டி வருவாய் கிராமத்தில் வரி விதிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்த சொத்திற்கு மனுதாரர் உரிமையாளர் என்பதால் வறியவர் ஸ்தானத்தில் தாவா வழக்கு தாக்கல் செய்ய சட்டப்படிக்கு இயலாது. மனுதாரருக்கு நீதிமன்ற கட்டணம் செலுத்த வசதியில்லை என்றால் இலவச சட்ட உதவி மூலம் உதவி கோரி

சட்டப்படிக்கு தாவா வழக்கு தாக்கல் செய்ய இயலும். மனுதாரர் பிராதில் கோரியுள்ள பரிகாரம் சட்டப்படிக்கு கிடைக்கக்கூடியது என்றால் நீதிப்பேராணை மூலம் உயர்நீதிமன்றத்தில் நீதிமன்றக் கட்டணம் இன்றி பரிகாரம் தேடிக் கொள்ளலாம். மனுதாரர் வறியவர் கோதாவில் தாவா வழக்கு தாக்கல் செய்ய கோருவதனை சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் ஏற்றுக்கொள்ள இயலாது. எனவே, மனுதாரரின் மனு முதல்நிலையிலேயே அசல் வழக்காக கோப்புக்கு எடுக்காமல் தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். ஆகவே, மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

7) 2, 3 எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் அழைத்தபோது ஆஜராகாத காரணத்தினால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டுள்ளனர்.

8) இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில்,

**மனுவில் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? இல்லையா?**

என்பதேயாகும்.

9) இம்மனுவில் மனுதாரர் தரப்பில் மனுதாரர் கருப்பசாமி ம.சா.1 ஆகவும், ஒரு ராஜா தென்னரசு என்பவர் ம.சா.2 ஆகவும் விசாரணை செய்யப்பட்டு ம.சா.ஆ.1 மற்றும் 2 ஆகிய ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

**பிரச்சினைக்கான தீர்வு:–**

10) மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில்,

மனுதாரர் பெயிண்டர் வேலை செய்யும் தினக்கூலி பணியாளர் என்றும் 1ம் எதிர்மனுதாரரின் அழைப்பின் பேரில் 23.05.2022 ஆம் தேதியன்று மனுதாரரும், ஒரு மணிகண்டன் என்பவரும் 1ம் எதிர்மனுதாரர் வீட்டிற்கு பெயிண்ட் அடிக்கும் வேலைக்கு சென்றுள்ளனர் என்றும் வீட்டின் மொட்டை காரைக்கு மேல் செல்லும் 2 அடி உயரத்தில் 33KV எலெக்ட்ரிக் கம்பி உள்ளது என்பதினால், மனுதாரர் வெள்ளையடிக்க முடியாது என்று கூறியதற்கு, 1ம் எதிர்மனுதாரர் எதுவும் நடக்காது என்றும் அசம்பாவிதம் ஏதும் ஏற்பட்டால் அதற்கு தான் பொறுப்பு ஏற்றுக்கொள்வதாகவும் கூறி வலுக்கட்டாயமாக வெள்ளையடிக்கும் வேலையை ஆரம்பிக்க சொல்லியுள்ளார் என்றும் மனுதாரரும் வேறு வழியில்லாமல் காலை 9.00 மணியளவில் வேலையை ஆரம்பித்து மதியம் 3.30 மணியளவில் வெள்ளையடித்துக் கொண்டிருக்கும்போது, திடீரென மனுதாரர் மீது மின்சாரம் தாக்கியதில் மனுதாரர் 15 அடி உயரத்தில் இருந்து கீழே தூக்கி வீசி எறியப்பட்டதில், மனுதாரருக்கு தலை, கழுத்து, காது மற்றும் முதுகு ஆகிய இடங்களில் கொடுங்காயம் ஏற்பட்டும், கால் மற்றும் தொடை பகுதிகளில் சதை பிய்த்தெரியப்பட்டும் மற்றும் தலையில் ஆழ்ந்த துவாரம் ஏற்பட்டும், சுய நினைவை இழந்து சம்பவ இடத்திலேயே மயக்கமடைந்துள்ளார் என்றும் உடனடியாக உடன் வேலை செய்து கொண்டிருந்த மணிகண்டன் என்பவர் அக்கம், பக்கத்தினர் உதவியுடன் விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்துள்ளார் என்றும் அங்கு முதலுதவி சிகிச்சை அளித்த பின்னர் காயத்தின் தன்மையைக் கருதி மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு

ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர் என்றும் அங்கு சென்று ஒன்றரை மாதகாலம் தொடர் சிகிச்சை பெற்ற பின்னர் வீடு திரும்பியுள்ளார் என்றும் வாதிடப்பட்டது.

11) மேலும் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில், விபத்தின் காரணமாக மனுதாரர் உடலளவிலும், மனதளவிலும் கடுமையாக பாதிப்படைந்துள்ளார் என்றும் 2, 3 எதிர்மனுதாரர்கள் பாதுகாப்பற்ற முறையில், 1ம் எதிர்மனுதாரர் வீட்டிற்கு மேலேயே 33 KV மின்சார வயர் உள்ள நிலையில், சட்டத்திற்கு புறம்பாக 1ம் எதிர்மனுதாரர் வீட்டிற்கு மின்இணைப்பு வழங்கியுள்ளனர் என்றும் 1 முதல் 3 எதிர்மனுதாரர்களின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் தான் மனுதாரர் கொடுங்காயம் அடைந்துள்ளார் என்பதினால், அதற்கு 1 முதல் 3 எதிர்மனுதாரர்களே முழுப்பொறுப்பு என்றும் இது தொடர்பாக பாண்டியன் நகர் ஊரக காவல்நிலையத்தில் 1ம் எதிர்மனுதாரர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, விருதுநகர், நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 ல் வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றும் மனுதாரர் மட்டுமே அவரது குடும்பத்தில் வருமானம் ஈட்டக்கூடிய நபர் என்றும் அவரை சார்ந்து அன்னாரின் தாய், தந்தை, மனைவி மற்றும் 2 குழந்தைகள் உள்ளனர் என்றும் மனுதாரருக்கு ஏற்பட்ட கொடுங்காயங்களினால் விபத்திற்கு பின்பு மனுதாரரால் எந்தவொரு வேலைக்கும் செல்ல இயலவில்லை என்றும் மனுதாரருக்கு சொந்தமாக அசையும் மற்றும் அசையாச் சொத்து ஏதும் இல்லை என்றும் மனுதாரர் அவரது மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளுடன் கஷ்ட ஜீவணம் செய்து வருகிறார் என்றும்

மனுதாரருக்கு நீதிமன்றக் கட்டணம் செலுத்துவதற்கு போதிய வசதி வாய்ப்பு இல்லை என்பதால், இந்த மனுவினை தாக்கல் செய்திருப்பதாகவும், அதனால் மனுப்படி உத்தரவாகவேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

12) 1ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில், மனுதாரரே தன்னை வறியவர் என்பதை நீதிமன்றத்தில் தக்க ஆதாரங்களுடன் நிரூபணம் செய்யக் கடமைப்பட்டவர் என்றும் மனுதாரர் குடியிருக்கும் மனு மற்றும் பிராதில் குறிப்பிட்டுள்ள கதவு எண்.1/4582/2 குடியிருப்பு வீடானது மேற்படியாருக்கு பாத்தியப்பட்ட சொந்த வீடாகும் என்றும் அந்த வீடானது மேற்படியாரின் தாயார் மாரீஸ்வரி பெயரில் ரோசல்பட்டி வருவாய் கிராமத்தில் வரி விதிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும் அந்த சொத்திற்கு மனுதாரர் உரிமையாளர் என்பதால் வறியவர் ஸ்தானத்தில் தாவா வழக்கினை சட்டப்படி தாக்கல் செய்ய இயலாது என்றும் எனவே, மனுதாரரின் மனு முதல்நிலையிலேயே அசல் வழக்காக கோப்புக்கு எடுக்காமல் தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும் என்றும் ஆகவே, மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டும் என்று வாதிடப்பட்டது.

13) இந்த மனுவினை நிரூபிக்கும்பொருட்டு, மனுதாரர் திரு.கருப்பசாமி தன்னை ம.சா.1 ஆக விசாரித்துக் கொண்டிருக்கிறார். அவர் தன்னுடைய மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளையே குறிப்பிட்டு நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளார். மேலும் அவர் தன்னுடைய நிரூபண வாக்குமூலத்தில், இந்த மனுவினை தாக்கல் செய்த சமயம் தன்னுடைய தாயாருக்கு சொந்தமான வீட்டில்

வசித்து வந்ததாகவும், தற்போது தன்னுடைய தாயார் வீட்டைவிட்டு வெளியேறி விருதுநகர், பாண்டியன் நகரில் உள்ள ராஜா தென்னரசு என்பவரின் வீட்டில் வாடகைக்கு கடந்த ஒரு வருடகாலமாக குடியிருந்து வருகிறதாகவும், தன்னுடைய மனைவி வேலைக்கு சென்று தன்னையும், தனது குடும்பத்தாரையும் பராமரித்து வருகிறதாகவும், விபத்திற்கு பின் வேலைக்கு சென்று சம்பாத்தியம் செய்ய முயற்சி செய்தபோது எந்த வேலையும் செய்ய இயலாமல் மயக்கம் வருகின்றது என்றும் விருதுநகர் வருவாய் வட்டாட்சியரால் தனது தாயாருக்கு சொந்தமான அவருடைய பூர்வீக வீட்டில் தான் வசித்து வருவதாக அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு இருந்தது என்றும் உண்மையில் மேற்படி சொத்தானது தனது தாயார் பெயரில் உள்ள தானசெட்டில்மெண்ட் ஆவணமாகும் என்று குறிப்பிட்டிருக்கிறார். அந்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் S.R.O நகலின் ஜெராக்ஸ் ம.சா.ஆ.1 ஆகவும், விருதுநகர், வருவாய் வட்டாட்சியர் இந்த மனுதாரரின் சொத்து விபரங்கள் குறித்து விசாரணை செய்து தாக்கல் செய்த அறிக்கை ம.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டிருக்கிறது.

14) ம.சா.1 குறுக்கு விசாரணை செய்யப்பட்டிருக்கிறார். அவர் தன்னுடைய குறுக்கு விசாரணையில்,

> "ம.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சொத்து எனது அம்மாவின் தனிப்பட்ட சொத்து ஆகும். எனது அம்மா காலத்திற்கு பின்னர் சொத்து எனக்கு தான் கிடைக்கும் என்று சொன்னால் அது எனது தாயாரின் விருப்பம் ஆகும்"

என்று தெரிவித்திருக்கிறார். மேற்படி ம.சா.ஆ.1 ஆவணத்தை

பரிசீலனை செய்யும்போது, இந்த மனுதாரரின் தாயாரான மாரீஸ்வரி என்பவருக்கு அவரது பெற்றோர்களான சுப்பையா, தங்கம்மாள் ஆகிய இருவரும் சேர்ந்து விருதுநகர் வட்டம், ரோசல்பட்டி கிராமம், கிழமேலோடிய மல்லாங்கிணர் ரோடுக்கு தென்சரகில் தங்கமணி காலனியில் சர்வே எண்.17/3A2 புஞ்சை ஏக்கர் 1 செண்ட் 42ல் கீழ்புறம் மனைநிலம் செண்ட் 3.1/2 நிலமும் & அதில் கட்டியுள்ள ஆஸ்பெஸ்டாஸ் மனைவீட்டின் கதவு எண்.1/4582/2–க்கு, வரிவிதிப்பு எண்.7382–க்கு, மின்இணைப்பு எண்.230–001–541 உள்ள மனைவீட்டினை பொறுத்து தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். மேற்படி ஆவணம் விருதுநகர், இணை சார்பதிவாளர் எண்.1 அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

15) அடுத்ததாக, விருதுநகர், வருவாய் வட்டாட்சியர் இந்த மனுதாரரின் சொத்து விபரங்கள் குறித்து விசாரணை செய்து தாக்கல் செய்த அறிக்கை ம.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்பட்டிருக்கிறது. அதனை பரிசீலனை செய்யும்போது அதில்,

"விருதுநகர் மாவட்டம், ரோசல்பட்டி கிராமம், தங்கமணி காலணி, கதவு எண்.1/4582/2 என்ற முகவரியில் வசித்து வருகிறார். தனியர் பெயிண்டராக பணிபுரிந்து வருகிறார். மேலும் தனியருக்கு ரோசல்பட்டி கிராமத்தில் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் ஏதும் இல்லையென்றும், மேலும் தனியர் குடியிருந்து வரும் கதவு எண்.1/4582/2 எண்ணுள்ள காரை வீடானது அவரது தாய் திருமதி.மாரீஸ்வரி பெயரில் உள்ளது. மேற்படி மாரீஸ்வரிக்கு அவ்வீடானது அவரது தாய்

வழி பூர்வீக பாத்தியமாக கிடைக்கப்பெற்ற சொத்து"
என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

16) இவ்வாறான நிலையில், மனுதாரர் இந்த மனுவினை தாக்கல் செய்த சமயத்தில் தன்னுடைய தாயாருக்கு சொந்தமான வீட்டில் வசித்து வந்ததாகவும், தற்போது தன்னுடைய தாயார் வீட்டைவிட்டு வெளியேறி விருதுநகர், பாண்டியன் நகரில் உள்ள ராஜா தென்னரசு என்பவரின் வீட்டில் வாடகைக்கு கடந்த ஒரு வருடகாலமாக குடியிருந்து வருகிறதாகவும் சொல்லி, மேற்படி ராஜா தென்னரசுவை ம.சா.2 ஆக விசாரித்திருக்கிறார். அவர் தன்னுடைய நிரூபண வாக்குமூலத்தில், மனுதாரர் கருப்பசாமி தனக்கு சுமார் 20 வருடங்களாக நன்கு தெரியும். அவர் தனது வீட்டில் அவரது மனைவி மற்றும் குழந்தைகளுடன் கடந்த 15 மாதங்கள் வாடகைக்கு குடியிருந்து வருகிறார். அவர் 1ம் எதிர்மனுதாரர் கார்த்திகேயன் வீட்டிற்கு பெயிண்ட் அடிக்க சென்றதில் பணியில் இருந்தபோது மின்சாரம் தாக்கியதில் அவர் படுகாயம் அடைந்தார். அவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்து மீண்டு வந்து தற்போது எந்த வேலைக்கும் செல்ல இயலாமல் வீட்டிலேயே இருந்து வருகிறார். அவரது மனைவி அவ்வப்போது வீட்டு வேலை ஏதேனும் கிடைத்தால் அங்கு சென்று பணியாற்றுவார். மேற்படி கருப்பசாமி அவர்கள் தனது மனைவி மற்றும் குழந்தைகளுடன் உணவு மற்றும் உடைக்கு மிகவும் கஷ்ட ஜீவணம் செய்து வருகிறார் என்ற விபரம் தனக்கு நன்கு தெரியும் என்று குறிப்பிட்டிருக்கிறார். இவரும் குறுக்கு விசாரணை செய்யப்பட்டிருக்கிறார்.

17) ஆக, மேலே விவரித்தவகையில், மனுதாரருக்கு

ரோசல்பட்டி கிராமத்தில் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் ஏதும் இல்லையென்பதும், மனுதாரர் குடியிருந்து வரும் கதவு எண்.1/4582/2 எண்ணுள்ள காரை வீடானது அவரது தாய் திருமதி.மாரீஸ்வரி பெயரில் உள்ளது என்பதும், மேற்படி மாரீஸ்வரிக்கு அவ்வீடானது அவரது தாய் வழி பூர்வீக பாத்தியமாக கிடைக்கப்பெற்ற சொத்து என்பதும் ம.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் தெரிய வருகிறது. இருப்பினும், மனுதாரர் இந்த மனுவினை தாக்கல் செய்யும் சமயத்தில் தான் தன்னுடைய தாயார் வீட்டில் குடியிருந்து வந்ததாகவும், தற்போது ம.சா.2 ன் வீட்டில் வாடகைக்கு குடியிருந்து வருவதாகவும் தெரிவித்திருக்கிறார். அதனையே ம.சா.2 ம் தன்னுடைய சாட்சியத்தில் குறிப்பிட்டிருக்கிறார். மேற்படி சங்கதிகளை மறுதளிக்கும் விதத்தில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்களோ, ஆவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேலும் 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் இந்த மனுதாரர் அவரது வீட்டிற்கு வெள்ளையடிக்க வரவில்லை என்றோ, வெள்ளையடிக்கும்போது மின்சாரம் தாக்கி இந்த மனுதாரருக்கு காயங்கள் ஏற்படவில்லை என்றோ கட்சி கிடையாது. மாறாக, இந்த மனுவினை நடத்திவரும், 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவில் 2, 3 எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினராக உள்ளனர். ஆகவே, மனுதாரரின் கூற்று ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் அமைந்திருப்பதால், மனுதாரர் தன்னை வறியவர் என்பதை தகுந்த சாட்சிகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் முறையாக நிரூபித்திருப்பதாகவே இந்நீதிமன்றம் முடிவு செய்து, மனுதாரருக்கு

அவர் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

18) முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு, மனுதாரரை வறியவர் என்று விளம்புகை செய்து அதன் அடிப்படையில் பிரதான வழக்கை தாக்கல் செய்ய அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

K JEYAKUMAR Digitally signed by K JEYAKUMAR

**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**விருதுநகர் மாவட்டம்(இ),**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>:–**

| | |
|---|---|
| ம.சா.1 | திரு.கருப்பசாமி (மனுதாரர்) |
| ம.சா.2 | திரு.ராஜா தென்னரசு |

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>:–**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | --- | கருப்பசாமி தாயார் பெயரில் உள்ள பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணம் (SRO நகல்) |
| ம.சா.ஆ.2 | --- | 30.03.2024 ம் தேதி விருதுநகர் வருவாய் வட்டாட்சியர் அளித்துள்ள அறிக்கை |

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u>:– இல்லை**

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>:– இல்லை**

K JEYAKUMAR

Digitally signed by K JEYAKUMAR

**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**

**விருதுநகர் மாவட்டம்(இ),**

**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.
Pauper O.P.101/2023
சீரான/வரைவு – உத்தரவு
18.04.2026